**செய்தி வெளியீட்டு எண். 04 நாள்: 06.01.2023**

# கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முனைவர் கே.கலா நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் மற்றும் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் வேந்தர் திரு ஆர்.என். ரவி அவர்கள் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முனைவர் கே.கலா அவர்களை நியமித்துள்ளார். அவர் பதவியேற்ற தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்கு இப்பதவி வகிப்பார்.

முனைவர் கே.கலா அவர்கள் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வருகைப் பேராசிரியராக தற்போது பணியாற்றுகிறார். அவர் 34 ஆண்டுகளுக்கு மேல் ஆசிரிய அனுபவமும் 8 ஆண்டுகளுக்கு மேல் நிர்வாக அனுபவமும் மிக்கவர். அவர் இரண்டு நூல்களை எழுதியுள்ளார். நான்கு சர்வதேச கல்வி நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளார். கல்வி ஒத்துழைப்புக்கான 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை உருவாக்கியுள்ளார். 20 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

பிராந்திய துணை இயக்குநர்,திருச்சி; என்கேஆர் அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வர், நாமக்கல், அரசு கலைக்கல்லூரி, கரூர் மற்றும் இயக்குனர், மாணவர் ஆலோசனை மற்றும் குறைதீர் பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி என பல்வேறு நிர்வாக பதவிகளை வகித்தவர்.

---

ஆளுநர் மாளிகை , சென்னை-22. வெளியீடு/--
நாள்: 06.01.2023 இணை இயக்குநர் (ம.தொ.)

**செய்தி வெளியீட்டு எண். 05** **நாள்: 06.01.2023**

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முனைவர் எஸ்.ஆறுமுகம் நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் மற்றும் சென்னை தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் வேந்தர் திரு ஆர்.என். ரவி அவர்கள் சென்னை தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முனைவர். எஸ்.ஆறுமுகம் அவர்களை நியமித்துள்ளார். அன்னார் பதவியேற்ற தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்கு இப்பதவி வகிப்பார்.

முனைவர். S. ஆறுமுகம், பேராசிரியராகவும் மற்றும் இயக்குனர், உயர் அழுத்த ஆராய்ச்சி மையம், இயற்பியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளியில் தற்போது பணியாற்றுகிறார். அவர் 25 ஆண்டுகளுக்கு மேல் ஆசிரிய மற்றும் ஆராய்ச்சி அனுபவம் மிக்கவர். அதில் 14 ஆண்டுகளுக்கும் மேலாக பேராசிரியராகப் பணியாற்றுபவர். ஏறக்குறைய 15 வருட நிர்வாக அனுபவம் உடையவர். அவர் திருத்தப்பட்ட புத்தகங்களில் மூன்று கட்டுரைகளை எழுதியுள்ளார். அவர் 19 சர்வதேச மற்றும் தேசிய கல்வி நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளார்.

சுமார் 10 கோடியில் பல்வேறு திட்டங்களை நிதியுதவி வழங்கும் DAE-BRNS, SERC, SERB, TANSCHE, DRDO, DMRL-கார்ஸ், AICTE, DST-JSPS, DST-போலந்து, DST-DAAD, DST-ரஷ்யா, இந்தோ-பிரான்ஸ் (CEFIPRA), ASEAN, DST-Swiss, UGC, CSIR, RUSA உடன் இணைந்து செயல்படுத்தியுள்ளார். 220 தேசிய மற்றும் சர்வதேச ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

தொலைதூரக் கல்விமையத்தின் இயக்குநர் மற்றும் மத்திய கருவி வசதி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் உட்பட பல நிர்வாகப் பதவிகளை வகித்தவர். முனைவர் எஸ்.ஆறுமுகத்திற்கு சென்னை, அகாடமி ஆஃப் சயின்சஸால் இயற்பியல் அறிவியலுக்கான 2021 மூத்த விஞ்ஞானி விருது வழங்கப்பட்டுள்ளது.

NISED பெங்களூரு வழங்கியடாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் வாழ்நாள் சாதனை விருது 2021; தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் 2014 இயற்பியல் துறையில் தமிழ்நாடு விஞ்ஞானி விருது மற்றும் வாழ்நாள் இந்திய ஸ்பெக்ட்ரோ-பிசிக்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா வழங்கும் சாதனை விருது 2020 ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். அவர் கல்விக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் பதினேழு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------

ஆளுநர் மாளிகை , சென்னை-22. வெளியீடு/--

நாள்: 06.01.2023 இணை இயக்குநர் (ம.தொ.)